**//அவசரம் //** **// தனிகவனம் //**

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண் 4726/அ2/2023 நாள் 14.12.2023

பொருள் பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – பள்ளிகளில் தொடர்ந்து பரிவர்தனை செய்யப்படாமல் வங்கி கணக்கில் இருப்பில் உள்ள தொகையினை பள்ளிக் கல்வி ஆணையரகத்தின் மூலம் தெரிவிக்கப்பட்ட கணக்கு தலைப்பில் மாற்றம் செய்து வங்கி கணக்கினை முடக்கம் ( Closed ) செய்த விவரங்களுடன் அனுப்ப கோரியது - தொடர்பாக

பார்வை
1. பள்ளிக் கல்வி ஆணையரக நிதிக்கட்டுப்பாட்டு அலுவலரின் கடித ந.க.எண் 008641/ FC/ 2023 -2 நாள் 14.11.2023
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 20.11.2023

பார்வை 1- ல் காணும் கடிதத்தின் படி, வேலூர் மாவட்டத்தில் உள்ள இணைப்பில் காணும் பள்ளிகளில் தொடர்ந்து பரிவர்தனை செய்யப்படாமல் வங்கி கணக்கில் இருப்பில் உள்ள தொகையினை கீழ்க்காணும் வங்கிக் கணக்கில் சார்ந்த வங்கியின் மூலம் உரிய தொகையினை செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பார்வை 2 ல் காணும் செயல்முறைகளின் படி, பள்ளிகளில் பரிவர்தனை செய்யும் 14 வங்கி கணக்குகளை தொடர்ந்து பரிவர்தனை செய்யப்படாமல் உள்ள தொகையினை RBI வங்கி கணக்கிற்கு மாற்றம் செய்யப்பட்ட தொகையினை மீள சார்ந்த வங்கியின் மேலாளரை தொடர்பு கொண்டு தங்கள் சுய விவரங்கள் KYC Update செய்த பின் மேற்காண் தொகை மற்றும் அதற்குண்டான வட்டி தொகையுடன் மீள Deaf Account லிருந்து தங்கள் வங்கி கணக்கிற்கு கொண்டு வந்து கீழ்க்காணும் கணக்கு தலைப்பில் IFHRMS மூலம் E-Challan வாயிலாக தொகையினை அரசுக்கு மாற்றம் செய்த பின் அவ்வங்கி கணக்கினை முடக்கம் செய்த (Closed) நகலுடன் பள்ளி தலைமைஆசிரியரின் முகப்பு கடிதத்துடன் 23.11.2023 ற்குள் இவ்வலுவலக அ2 பிரிவில் நேரில் ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் இணைப்பில் காணும் பள்ளி தலைமைஆசிரியர்கள் இந்நாள் வரை அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளாமல் காலதாமதிப்பது வருந்தத்தக்க செயலாகும் . இதனால் பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு தகவல்கள் தங்களிடமிருந்து பெற்று தொகுத்து அனுப்ப காலதாமதம் ஏற்படலாகிறது.

எனவே இனியும் காலதாமதத்திற்கு வழிவகுக்காமல் உடன் 15.12.2023 மாலை 4.00 மணிக்குள் Deaf Amount தொடர்புடைய அனைத்து ஆவணங்களுடன் சமர்பிக்குமாறு மீள தலைமைஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது

**இணைப்பு** – அரசு கணக்கு தலைப்பு மற்றும் மாதிரி சலான் நகல்

//ஒப்பம் //

// செ.மணிமொழி //

முதன்மைக் கல்வி அலுவலர்,

வேலூர்.

**பெறுநர்**

சம்பந்தப்பட்ட தலைமைஆசிரியர்கள் வேலூர் மாவட்டம்.